சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :22.01.2025
வா.சா.1 – வள்ளி W/o ராதாகிருஷ்ணன்,
O.S No.256/2022 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் பூவியாபாரம் செய்து வருகிறேன். மாதம் எனக்கு சுமார் 10,000 ரூபாய் தோராயமாக வருமானம் கிடைக்கும். 2வது வாதியான என்னுடைய மகன் வினோத்குமார் டீக்கடையில் வேலை செய்து வருகிறார். மாதம் சுமார் 15,000ரூபாய் 2ம் வாதியான என்னுடைய மகன் வினோத்குமார் சம்பளம் பெற்று வருகிறார். எனக்கு பூவியாபாரம் தவிர வேறு எந்த வருமானமும் கிடையாது. நான் வருடா வருடம் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. பணத்தை திருப்பி செலுத்தாத காரணத்திற்காக பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2, 30.06.2019 தேதியிட்ட 4லட்சம் ரூபாய்க்கான கடன் பத்திரம் ஆகும். மேற்படி ஆவணத்தை LKB நகர் மதுரையில் வைத்து கையெழுத்து செய்தோம். மேற்படி ஆவணத்தை 2ம் பிரதிவாதி பாண்டியராஜன் பத்திர ஆபிசில் அடித்து எங்கள் வீட்டிற்கு எடுத்து வந்தார். அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம். கையெழுத்து செய்யும் போது, என் அண்ணன் சஞ்சீவி, என் அம்மா பிச்சையம்மாள், நான், சரோஜா, அவரது மகன் பாண்டியராஜன், சரோஜா மகள் மல்லிகா ஆகியோர் இருந்தார்கள். என்னுடைய வழக்கிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும், வா.சா.ஆ.2 கடன் பத்திரத்திலும் எத்தனை நாட்களுக்குள்ளாக தொகையை கொடுக்க வேண்டுமென்று காலக்கெடு நிர்ணயம் செய்யப்படவுமில்லை, குறிப்பிடவுமில்லை என்றால் சரிதான். பொதுவாக, கடன் கொடுப்போர், மற்றும் கடன் வாங்குவோர் இருவருமே கையெழுத்து செய்ய வேண்டுமென்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 கடன்

பத்திரத்தில் சாட்சிகளாக சஞ்சீவி, மற்றும் பொன்ராஜ் ஆகியோர் கையெழுத்து செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 கடன் பத்திரத்தில் கடன் கொடுத்தவர் கையொப்பமிடும் பகுதியில் சஞ்சீவி, மற்றும் பொன்ராஜ் ஆகியோர் கீழே கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் முதல் தாளில் உள்ள என்னுடைய கையெழுத்தும், 2வது தாளில் உள்ள என்னுடைய கையெழுத்தும் மாறுபடுகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் முதல் தாளில் என்னுடைய கையெழுத்து முதலாவதாகவும், 2வது தாளில் என்னுடைய கையெழுத்து 2வது நபராக வரிசை மாறி கையெழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால் நாங்கள் அவ்வளவாக படிக்கவில்லை, அதனால் தெரியவில்லை. மேற்படி 4 லட்சம் ரூபாய்க்கான கடன் பத்திரத்திலோ, வழக்கிலோ பிணையமாக கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் சொத்தின் விபரம் பற்றி தெளிவாக எடுத்துரைக்கவில்லை என்றால் கடன் பத்திரத்தை 2ம் பிரதிவாதி தான் தயாரித்து கொண்டு வந்தார். நான் அதை படிக்கவில்லை. மேற்படி வா.சா.ஆ.2 பத்திரத்தில் கடன் வாங்குவோர் பகுதியில் 3 வது கையெழுத்தாக மல்லிகா என்பவரும், கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். வா.சா.ஆ.2 கடன் பத்திரத்தில் 4 லட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டதற்கான ரசீது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. சிலைமான் காவல்நிலைய குற்ற எண்.340/2021 என்ற வழக்கில் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரோஜா தான் புகார் கொடுத்தார். பிரதிவாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் அதிக வட்டி கேட்டதாக குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி முதல் தகவல் அறிக்கையில் நான், என் மகன்,

மற்றும் சஞ்சீவி ஆகியோர் குற்றம்சாட்டப்பட்டவர்களாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை. மேற்படி முதல் தகவல் அறிக்கையின் படி, ரூபாய் 2,40,000/-த்தை பிரதிவாதிகள் செலுத்திவிட்டதாகவும், நான் அதிகப்படியான வட்டி கேட்டு துன்புறுத்தியதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் வட்டி எதுவும் வாங்கவில்லை. மேற்படி வழக்கில் நானும், என் மகன் வினோத்குமாரும் கைது செய்யப்பபட்டு பிணையில் வந்தோம் என்றால் சரிதான். என் அண்ணன் சஞ்சீவியும் கைது செய்யப்பட்டு பிணையில் வெளியே வந்தார் என்றால் சரிதான். நான் 10 நாட்கள் சிறையில் இருந்தேன். என் மீது வேறு எந்த குற்ற வழக்கும் இல்லை. நான் பிரதிவாதிக்கு 4 லட்சம் ரூபாய் கடனாக கொடுத்தேன். மேற்படி 4 லட்சம் ரூபாயை வட்டியுடன் பிரதிவாதி தரப்பில் செலுத்திவிட்டார்கள் என்றும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பணம் செலுத்தப்பட்டுவிட்டால் நாங்கள் ஏன் வழக்கு தாக்கல் செய்கிறோம். என்னிடம் வாங்கிய தொகையை பிரதிவாதி திருப்பி செலுத்திவிட்ட நிலையில் அவர் எங்களிடம் கொடுத்த கடன் பத்திரத்தை திருப்பி கேட்டார்கள் என்றும், நாங்கள் கடன் பத்திரத்தை கொடுக்க மறுத்துவிட்டோம் என்று சொன்னால் அவர் பணமே கொடுக்கவில்லை. பிரதிவாதி எவ்வித கடன் பத்திரமும் எங்களுக்கு எழுதி கொடுக்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.01.22 19:42:04 +0530

Sub Judge

Melur